# குடியிருப்புவாசிகள் மற்றும் வியாபாரிகள் 2022 ஆம் ஆண்டிற்கான வரி செலுத்துவதை நகர நிர்வாகம் தொடர்ந்து ஒத்திவைக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 29, 2021) – தகுதி வாய்ந்த குடியிருப்புவாசிகள் மற்றும் வியாபாரிகளுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான சொத்து வரி செலுத்துவதை ஒத்தி வைக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் அனுமதிக்கும்.

கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட துன்பங்களை எதிர்கொண்ட குடியிருப்புவாசிகள் மற்றும் வியாபாரிகளுக்கு ஆதரவளிப்பதற்காக, சொத்து வரி செலுத்துவதை ஒத்தி வைக்கும் திட்டமானது 2021 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது.

இடைக்கால 2022 சொத்து வரி கேடுப் பட்டியலுக்கு பணம் செலுத்துவதை ஒத்திவைப்பதற்கான விண்ணப்பங்களை நகரம் ஜனவரி 2022 இல் ஏற்றுக்கொள்ளத் துவங்கும். இந்த திட்டத்திற்கு தகுதிபெறுவதற்கு, ஏப்ரல் 8, 2022 வெள்ளிக்கிழமைக்குள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த விருப்பத்தைத் தேர்வுசெய்யும் பங்கேற்பாளர்கள் தங்கள் இறுதி வரி கேட்பு பட்டியலுக்கு தன்னியக்கமாக ஒத்திவைப்பு பெறுவார்கள். சொத்து வரி செலுத்துதல் ஒத்திவைப்பு திட்டத்திற்குத் தகுதிபெறுவதற்கு, அவரவர் சொத்து வரிக் கணக்குகளில் மார்ச் 2020க்கு முந்தைய வரி பாக்கிகள் இருக்கக்கூடாது. முந்தைய ஆண்டுகளின் வரி பாக்கிகளுக்கான அபராதம் மற்றும் வட்டிக் கட்டணங்கள் கூடிக்கொண்டே வரும். குடியிருப்பாளர்களும் வணிகங்களும் சொத்து வரிகளை நேரடியாக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்திற்கே செலுத்த வேண்டும், அடமான நிறுவனம் மூலமாக ஏற்கப்படமாட்டாது. அதுபோலவே, வரி ஒத்திவைப்பு விண்ணப்பங்களும் சொத்து உரிமையாளராலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் சார்பாக ஒரு நிதி நிறுவனத்தால் சமர்ப்பிக்கக் கூடாது.

சொத்து வரி செலுத்துதல் ஒத்திவைப்புத் திட்டத்திற்குத் தகுதிபெற்று, தற்போது நகரின் முன்-அங்கீகரிக்கப்பட்ட வரி செலுத்துதல் (PTP) திட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகர்கள், PTP திட்டத்தில் இருந்து நீக்கப்படுவார்கள்; இதற்கு மீண்டும் பதிவுசெய்ய புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்; இதனை 2023 இடைக்கால வரி கேட்பு பட்டியல் காலக்கெடுவுக்கு முன்னதாக மறுபதிவுசெய்ய வேண்டும். PTP திட்டத்திற்கு மீண்டும் பதிவு செய்வதற்கு முன் அனைத்து வரிகளும் செலுத்தப்பட வேண்டும்.

தங்கள் சொத்தின் அடமானத்தின் ஒரு பகுதியாக வரி செலுத்தியவர்கள் தங்கள் அடமான சேவை வழங்குநரைத் தொடர்புகொண்டு, வரி செலுத்துதலை ரத்து செய்யலாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அடமான சேவை வழங்குநர், குடியிருப்பாளர்/வணிகத்தை நகர நிர்வாகத்தின் பட்டியலிலிருந்து அகற்றுமாறு நகரத்திற்கு அறிவுறுத்த வேண்டும்.

வரி ஒத்திவைப்பு என்பது வரி ரத்து செய்தாகிவிட்டது என அர்த்தமாகாது. அபராதம் அல்லது வட்டி

செலுத்துவதைத் தவிர்க்க, ஒத்திவைக்கப்பட்ட தொகைகள் அனைத்தையும், டிசம்பர் 15, 2022 க்கு முன்பாக, அந்த சமயத்தில் தவணை தாண்டிய பாக்கிக்கான அபராதம் மற்றும் வட்டியுடன் செலுத்தப்படவேண்டும்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca